Secretary's Reference
TAMIL N... 20 DEC 1982 MADRAS-600 009

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1982 மார்ச் 13.

துன்மதி, மாசி 29, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி

முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

1. அறிவிப்பு

இறுதித் துணை நிதி நிலை அறிக்கை.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 205 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ் 1981—82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கையை, 22—3—1982 ஆம் தேதி திங்கட்கிழமை சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முக்கியமான பிரச்னைகள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம் மண்டைக்காட்டில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து இன்றைக்கு விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல நீதிமன்றங்களில் தமிழ் மொழி பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறோம். இதுபற்றி மாமன்றத்திலே இருக்கிற அத்தனை கட்சிகளுக்கும் அக்கறை இருக்கிறது, அரசாங்கம் உள்பட. அதை விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா எதிர்க்கட்சிக்காரர்களும் ஒரு கருத்தினை சொல்லியிருக்கிற காரணத்தினாலே ஒரு மணிக்கு இராஜக்காமங்கலம் பிரச்னையை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.